[25th February 1969

இந்த ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இரண்டு முறை சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது. அதேபோல வாடகைப்படியையும் மத்திய சர்க்காருக்கு கொடுப்பதைப் போல கொடுக்க சீக்கிரமாக முடிவு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைத்தான் நான் சொன்னேன். இதில் இல்லை என்ற நிலைமையே இல்லை. மனம் இருக்கிறது. மார்க்கம் தற்போதில்லை. மூன்று முறை டி. ஏ. கொடுக்கப்பட்டதை அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அதே மாதிரி நகர ஈட்டுப் படியும் கொடுக்கப்பட்டது. இது கொடுக்கக் கூடாது என்றில்லை. சென்னை, மதுரை போன்ற இடங்களுக்கு மட்டும் கொடுப்பதற்கு ரூ. 85 லட்சம் தேவைப்படுகிறது. ஜனவரி 1-ம் தேதி முதல் மத்திய அரசாங்கத்திற்கும் நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கும் உள்ள அகவிலைப்படி வித்தியாசம் அகற்றப் பட்டது. சென்னை நகரம் 'ஏ' நகரமாக்கப்பட்டு இந்த அரசு வந்த பிறகுதான் அந்தப் படி வந்தது. ஆகையால் இவர்களுடைய யோசனையை அரசாங்கம் கண்டிப்பாக கவனிக்கும். தற்போது நிலை சரியாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: (House) ரெண்ட் அலவன்ஸ் கொடுக்க மனம் நிறைய இருக்கிறது என்றும், பணம் நிறைய இல்லை என்றும் பொருள்பட அமைச்சர் சொன்னார்கள். லாட்டரி சீட்டு வருவாயில் லாபம் நிறைய வருகிறது. அந்தத் தொகையிலிருந்து ஒரு பகுதி ஒதுக்கி இதற்குக் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதை ஏன் செய்ய முடியவில்லை என்பதே தவிர வீட்டு வாடகைப்படி கொடுக்கவில்லை என்ற நிலையில்லை. வீட்டு வாடகைப்படி முன்பே கொடுக்கப் படுகிறது. நம்முடைய வாடகைப் படிக்கும் மத்திய அரசு தரும் வாடகைப்படிக்கும் வேறுபாடிருக்கிறது. அதுதான் வித்தியாசமே தவிர கொடுக்கப்படாமல் இல்லை.

Procurement of paddy

* 42 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether any complaint has been received from the President of Tirunelveli Agriculturists' Association that authorities are seizing the paddy stored in the houses of the agriculturists for their food requirements and seed purposes even after fulfilling their quota of levy in Tirunelveli district; and

(*b*) if so, the action taken thereon?

25th February 1969]

நெல் கொள்முதல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெல்லை மாவட்டத்தில் லெவிக்கு நெல் அளந்த பின்னரும் அதிகாரிகள் விவசாயிகள் வீடுகளில் சோதனை போட்டு சாப்பாட்டுக்கு வைத்திருக்கும் நெல்லையும் விதை நெல்லையும் பறிமுதல் செய்வதாக நெல்லை விவசாய சங்கத் தலைவர் புகார் செய்தாரா ?

(இ) ஆமெனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தப் புகார் நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்ல. எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. சர்க்கார் கொள்முதலுக்கு நெல் அளந்து கொண்டு போனபிறகும் வீட்டில் சொந்த உபயோகத்திற்காக வைத்திருக்கும் நெல்லைத் தொல்லை செய்து வாங்குவதும், அரிசியாக அறைக்க மில்லுக்குப் போகும் வழியில் பறிப்பதும் சகஜமாக நடைபெற்று வருகின்றது. இது மன்றத்திலுள்ள அனைவருக்கும் தெரிந்த விஷயம். அந்தத் தொல்லையில்லாமல் இருக்க தகுந்த நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அம்மாதிரி அக்கிரமமாகக் கொள்முதல் செய்யும் அதிகாரிகள் விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதை விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் பலர் லெவிக்கு நெல் அளக்காமல் அந்த நெல்லை வேறு வீடுகளில் கொண்டுபோய் பதுக்கி வைத்துவிடுகிறார்கள் என்பது பற்றி அங்கத்தினருக்கும் தகவல் வந்திருக்கும். சர்க்காருக்கு கொள்முதலில் விவசாயிகள் ஒத்துழைக்கவேண்டும். உதவி செய்ய வேண்டும். இதில் ஏழையாக உள்ளவர்கள் சரியானபடி கொள்முதலுக்கு அளந்துவிடுகிறார்கள். பெரும் நிலச்சுவான்தார்கள் தான் அளக்காமல் பதுக்கிவைப்பதால் இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ரைஸ்மில்லுக்கு எடுத்துப் போகும்போது பிடிப்பட்டிருந்தால் அதைப்பற்றி தகவல் வந்ததும் அதையெல்லாம் திருப்பிக் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. ஏற்கனவே லெவிக்கு அளந்திருப்பதாகத் தெரிந்தாலும் பிடிபட்டவை கொடுக்கப்படுகின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, கொள்முதலுக்கு அளந்ததுபோக பாக்கியுள்ள நெல்லை அவர்கள் அந்த ஜில்லாவிற்குள் எந்த இடத்திற்குமோ அல்லது வெளியேயோ கொண்டுபோய் விற்க அனுமதிக்கப்படுவார்களா ?

[25th February 1969

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கட்டுப்படுத்தப்பட்ட எல்லேக்கு மேல் கொண்டுபோக அரசாங்கம் அனுமதிக்காது.

திரு. டி. கே. சுப்பையா: லெவி கொள்முதலில ஒரு ஏக்கருக்குக் குறைந்தவர்களுக்கு விதிவிலக்கு உண்டா, அல்லது கொள்முதல் செய்யப்படுமா? அவர்கள் நெல் சாகுபடி செய்த நிலத்திற்கு மட்டும் கொள்முதலா அல்லது ஏனைய நிலங்களுக்கும் கணக்கிட்டு லெவி கேட்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஒரு ஏக்கருக்குக் குறைந்து உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. சில இடங்களில் தவருகக் கொள்முதலுக்குப் போனுர்கள் என்று தகவல் வந்தபோதும் அதை திரும்பக் கொடுக்குமாறு உத்திர விடப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: ஒரு ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கும் சின்னமனூர் ஷண்முகம் பிள்ளே என்பவரிடம் அவர் தனக்கு ஏழு மூட்டைதான் விளேந்தது என்று சொல்லியும் கேட்காமல் கொள்முதலில் கொண்டுபோய்விட்டார்கள். அதற்குப் பணம் கொடுப்பதாகச் சொன்னுர்கள். கொடுக்கவில்லே. பழைய உணவு அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு அதன் நகலே எனக்கும் அனுப்பினுர்கள். நான் உணவு இலாகா காரியதரிசிக்கு அதை அனுப்பி கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதற்கான பணம் இன்னும் கொடுக்கப்படவில்லே. அத்துடன் 12 மூட்டை அவர் கொடுக்கவேண்டுமென்று கேட்கிருர்கள். அவர் ஏழு மூட்டை விட்டிருக்கிருர். அவரிடம் 12 மூட்டை கேட்கப் படுகிறது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஏழு மூட்டைதான் விளேந்தது என்பதை என்னல் ஒத்துக்கொள்ள முடியவில்லே. அங்கத்தினர் கூறும் விஷயத்தை குறிப்பாக எழுதியனுப்பினுல் அதை விசாரணே செய்து விளக்குகின்றேன். முன்பே இது விசாரிக்கப்பட்டு முன்பு இருந்த அமைச்சரால் விளக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கே. சுப்பையா: ஒரு கிராமத்தில் 40 செண்ட், 30 செண்ட் என்று சாகுபடி செய்பவர்கள் இருக்கிருர்கள். அவர்களுடைய லிஸ்ட் தயார் செய்து நிதி அமைச்சராக இருக்கிற அமைச்சருக்கு அனுப்பியிருக்கிருர்கள். அதையாவது பரிசிலணே செய்து இனிமேலாவது அரசாங்கம் தகுந்த அறிக்கையை வெளியிடுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஏற்கனவே அமைச்சர் கவனித்து இருப்பதாக தெரிகிறது.